பிர்க்கா அபிவிருத்தித் திட்டமா, பித்தலாட்டத் திட்டமா?

மதுவிலக்கை அமுல் நடத்த வரிப்பணத்தைக் கரியாக்குவதா?

அபிவிருத்தித் திட்டங்களால் கண்ட அபிவிருத்திகள் யாவை?

ஆட்சிமுறையின் அலங்கோலநிலை பற்றி சட்டசபை உறுப்பினர் கவலை

"மது விலக்குத் திட்டத்தை நான் எதிர்க்கவில்லை. ஆனால் மதுவிலக்கு காரணமாக அரசாங்கம் அளவற்ற பணத்தை வீணாக்குவது கூடாது என்கிறேன். சீடட் ஜில்லாக்களில் மாத்திரம் மதுவிலக்கை அமுல் நடத்துவதற்கு ரூ. 6,07,400 செலவிட வேண்டியிருக்கிறது. இஃதன்றி ரூ. 50,000 வேறு செலவிட வேண்டியிருக்கிறது. இவை அனைத்தும் வீண் செலவே. மதுவிலக்கை அமுல் நடத்தும் ஆர்வத்தால் உந்தப்பட்டு பொதுமக்கள் பணத்தை இப்படிப் பாழாக்கக் கூடாது."

"பிர்க்கா அபிவிருத்தித்திட்டம் என்பது ஒரு மோசமான திட்டம். இந்தத் திட்டத்தால் ஏற்பட்ட அபிவிருத்திகள் எவை என்பதை அரசாங்கம் இச்சபையினருக்கு அறிவிக்க வேண்டும்."

சென்னை அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தின் தொடர் திட்டம் பற்றிய விவாதம் நடைபெற்றபோது, சட்டசபை உறுப்பினர் தோழர் பி. நடேசன் மேற்கண்டவாறு பேசியுள்ளார்.

மதுவிலக்கு, பிர்க்கா அபிவிருத்தி என்னும் இருதிட்டங்களைச் சுட்டிக்காட்டி, இவை பணத்தைப் பாழாக்கும் திட்டங்கள் எனத் தெளிவுபடக் கூறுகிறார் தோழர் நடேசன்.

மதுவிலக்குத் திட்டத்தை தான் குறைகூற வில்லை என்றும் அவர் கூறுகிறார். ஆம், அவர்மட்டுமல்ல, நல்லறிவு படைத்த எவரும் மதுவிலக்கைக் குறைகூற முன் வரார். ஆனால் அதே நேரத்தில், மதுவிலக்கைக் காரணமாகக் காட்டி, காசைக் கரியாக்கும் கருத்தற்ற செயலை யாரும் கண்டிக்காமலிருக்க முடியாது. மதுவிலக்கை அமுல் நடத்தும் முறையில் அரசாங்கம் எவ்வளவு பணத்தைப் பாழ்படுத்துகிறது என்பதைத் தோழர் நடேசன் புள்ளி விபரங்களோடு காட்டுகிறார்.

பொதுவாக மதுவிலக்கால் அரசாங்க வருவாய் 17 கோடி ரூபாய் குறைந்துவிட்டது என்பது நாடறிந்த உண்மை. இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு வேறு பல வரிகள் மூலம் பொது மக்களிடமிருந்து பணம் வசூலிக்க வேண்டியிருக்கிறது. இதனைச் சுருங்கச் சொல்லவேண்டுமானால் மதுவிலக்கால் அரசியலார்க்கு நஷ்டமும், பொதுமக்களுக்குக் கஷ்டமும் விளைந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

இங்ஙனம் கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கு மிடையேதான் இந்த காசைக் கரியாக்கும் படலம். நடத்திக் காட்டப்படுகிறது ஆட்சியாளர்களால்.

இதற்குக் காரணம் என்ன? இதுதான் நாம் சிந்திக்க வேண்டிய விஷயம். மதுவிலக்குத் திட்டம் ஒரு மகத்தான திட்டம். அதனை அமுல் நடத்துவது கடினமே. அப்படி அமுல் நடத்தி வெற்றி காணவேண்டுமானால் திட்டம் தயாரிக்கும் அடிப்படை வேலையில் அதிக கவனம் செலுத்தியிருக்கவேண்டும். படிப்படியாகச் செய்யவேண்டிய பணிகளில் மதுவிலக்கும் ஒன்று. அப்படிச் செய்திருந்தால் திட்டம் வளர்ச்சி அடைந்து முழு வெற்றியைத் தந்திருக்கும். அதாவது, எந்த திட்டமும் சரிவர நிறைவேற வேண்டுமானால் அரசியல் முறை சமதர்ம அடிப்படையில் அமைய வேண்டுவது இன்றியமையாததாகும். சமதர்மம் நிலைபெறச் செய்துவிட்டால் இம்மாதிரியான திட்டங்கள் எளிதில் வெற்றியைத் தேடித்தரும்.

அதைவிடுத்து, தேர்தல் காலத்தில் மக்களிடையே ஏதோ உளறிக்கொட்டி விட்டோமே, நாளைய தினம் மக்கள் நம்மைப் பார்த்து, எங்கே அந்தத் திட்டங்கள் என்று கேட்பார்களே என்று பயந்து கொண்டு, அல்லது வெற்று ஆரவாரத்தில் நம்பிக்கை வைத்து, அவசர கோலத்தை அள்ளித்தெளிப்பது போல மதுவிலக்குத் திட்டத்தை, சட்டத்தின் துணைகொண்டு, நினைத்த மாத்திரத்தில் அமுல் நடத்த விரும்பினால் இத்தகைய அக்கேடுகள், அனாவசியச் செலவுகள், அல்லல்கள் முதலியன ஏற்படுவதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

நாட்டில் மக்கள் மதுவருந்தும் பழக்கம், வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ரயில் வண்டித் தொடருக்கு ஒப்பாகும். அத்தகைய ரயில் வண்டியின் வேகத்தை நினைத்த அளவிலே "சடன் பிரேக்" போட்டு நிறுத்த முயன்றால், வண்டித் தொடர் தண்டவாளத்தை விட்டிருக்கும்; சிலவேலைகளில் கவிழ்ந்தே போகும். ஒன்றோடொன்று மோதி வண்டிகள் நொறுங

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502 Regd. No. M. 5458
விலை ஒரு அணா இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (26—3—50) வெளியூர் (27—3—50) [இதழ் 205

தமிழ்க் களஞ்சியம் உருவாவதற்கு அரசியலார் உதாசினம்

பண உதவி கொடுக்கிறேன் என்று கூறி ஏமாற்றிவிட்டனர்!

சென்னை, மார்ச். 25—

தமிழ்க் களஞ்சியம் எழுதப்படுவதற்கு இந்திய அரசாங்கம் உதவுவதாகக் கூறிய ரூ. 75000-த்தைக் கொடுக்க முடியாது என்று இந்திய அரசாங்கம் அறிவித்துவிட்டது. தமிழ்க் களஞ்சியம் உருவாக்கப்படுவதற்காக நியமிக்கப்பட்ட குழு, நேற்றுமாலை பல்கலைக் கழகக் கட்டிடத்தில் தோழர் தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் தலைமையில் கூடியது.

இந்திய அரசாங்கம் பணம் தர முடியாதென்று கைவிரித்துவிட்டதென்றும் இதுவரை ரூ. 46000-தான் வசூலாகியுள்ளதென்றும் இதற்காகத் தேவைப்படும் பணம் ரூ. 15 லட்சமாகையால் பொதுமக்கள் தாராளமாகக் கொடுத்துதவவேண்டுமென்றும் குழுவினர் அறிவித்தார்கள்.

மின்பு தமிழ் இலக்கியப் பிரிவுக்கு வேண்டிய நூல்களைத் தொகுக்கப்படுவதற்காக இரண்டு உபகமிட்டிகள் அமைக்கப்பட்டன. ஒன்றில் தோழர்கள் ரா.பி. சேதுப்பிள்ளை, டி. பி. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசனார் அவர்களும் மற்றதில் தோழர்கள் எ. சி. செட்டியார், ஜி. சுப்பிரமணியப்பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார் ஆகியவர்கள் இருப்பார்கள்.

கிழக்கு வங்கத்திற்கு மூன்று சணல் ஆலைகள்

டாக்கா, மார்ச். 25—

கிழக்குவங்கத்தில் மூன்று சணல் ஆலைகள் ஏற்படுத்துவதற்காக ரூ. 910,00.000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாராயண கஞ்ஜில் ஏற்படுத்தவிருக்கும் ஆலை மிகப் பெரியதாக இருக்குமாம்.

இம்மூன்று ஆலைகளிலிருந்து 600,000 பேல் சணல் உற்பத்திச் செய்ய முடியும் என்று கூறப்படுகிறது. இதற்குப் பாகிஸ்தான் சர்க்கார் பண உதவி செய்யவிருக்கிறது.

சேனநாயகா சர்க்கார் பணிகிறது

—(0)—

குடிமக்கள் உரிமை மசோதா திருத்தப்படும்

கொழும்பு, மார்ச் 25

இலங்கை பிரஜா உரிமை (இந்தியர் பாகிஸ்தானிகள்) சட்டத்தில், சில குறைபாடுகள் இருப்பதை இலங்கை சர்க்காரே கொண்டுவந்திருக்கின்றனர். இவைகளைநிவர்த்திக்க திருத்த மசோதா கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இது என்ன குறைபாடுகள் என்று தெரியவில்லை என்றாலும், இவை இந்தியர் நிலைமையைப் பற்றியது தான் என்று கருதப்படுகிறது.

இதுமாறினால், இலங்கை இந்தியர் காங்கிரஸ் சர்க்கார் விஷயத்தில் பின்பற்றும் கொள்கை மாறலாம் என்பதுடன், அந்த சட்டத்தை அமுல் நடத்துப்படி இந்தியர்களைக் காங்கிரஸ் கேட்டுக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.



டாக்டர். ஆர். விசாலாட்சி M. B. B. S. ★ இரா. நெடுஞ்செழியன் M. A.

அன்புடையீர்!

வணக்கம். இன்று காலை சேலம் மாவட்ட ஆவணப்பதிவாளர் முன்னிலையில், பதிவுத் திருமணம் செய்துகொண்டு, வாழ்க்கைத் துணைவர்களாகியுள்ளோம் என்ற செய்தியை, அன்பர்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சேலம்,
26-3-50

ஆர். விசாலாட்சி,
இரா. நெடுஞ்செழியன்

"இராபர்ட் கிரீன் இங்கர்சால்"

கு. தனபாலன்

"இதென்ன அனியாயம்—அக்கிரமம்! இந்தப்படுபாவி, நமது ஆகமத்தை—ஆண்டவனை அவமதித்துப்பேசுகின்றானே. இவன் உருப்படப் போவதில்லை. ஏழேழு தலைமுறைக்கும் இப்பாபம்; அவனை விட்டு நீங்கப் போவதில்லை!"

"சந்தேகமென்ன, இவன் விளங்கவாப் போகின்றான். கடவுளைக் கண்டபடி வைதவர்கள் குவலயத்தில் நல்வாழ்வுடன் வாழ்ந்ததாக நான் கேள்விப்பட்டதுமில்லை—கண்டதுமில்லை. இவன் மட்டுமென்ன அதற்குப் புறம்பா?"

"ஒருபாதிரியின் வயிற்றில் பிறந்த பிள்ளையா இப்படிப் பிதற்றுவது? சர்வ வல்லமையுடைய கடவுள், எப்படித்தான் இந்த அநீதியைச்சகித்துக்கொண்டிருக்கிறாரோ தெரியவில்லையே! அந்தப் பயலுக்குத் துளியாவது பயமிருந்தால், இப்படித்தாறுமாறாக நமது புனித மதத்தைப் பலவாறு இழித்துப் பழித்துக் கூறித்திரிவானா?"

"வேண்டுமானால் பாருங்கள்.., அரசன் அன்று கொன்றால் ஆண்டவன் நின்று கொல்வான் என்பதை, அம்மதையாளன் உணரும் காலமின்னும்வெகுதொலைவிலில்லை. இவன செய்யும் அட்டுழியங்களுக்கெல்லாம் ஒருநாள் இந்த நாத்திகன், பரலோக பிதாவிடம் கைகட்டிப் பதில்சொல்லியாக வேண்டும்........

மேற்கண்ட கண்டனச் சொற்களை விட இன்னும் சற்றுக் கடுமையாகக்கூட தாக்கினர். அன்று அமெரிக்க மக்கள் பகுத்தறிவுப் பாதையில் நடந்து இன்பபுரியை அடையுங்களென்று அறிவுரைகள் வழங்கிய அறிஞர் ராபர்ட் கிரீன் இங்கர்சாலை! மதத்தின் பெயரால் மதோன்மத்தர்கள், மக்களை மாக்களாக வாழும் படிவழிவகுத்ததை அவர்பலமாக கண்டித்தார். உழைக்காதுஉண்டு உப்பி வாழும் உலுத்தர்களின் உறுமல் ஒருபுறம்—மத மூட நம்பிக்கைகளைப் போதித்து, மக்களைச் சுறண்டி மகோன்னத வாழ்வு வாழ்ந்துவந்த மதகுருமார்களின் மிரட்டல் ஒருபுறம்—அதிகாரத் திமிர்படைத்த அரசாங்கம் எதையும் எளிதில் நம்பிவிடும் ஏமாளிகளின் ஏசல்கள்ஒருபுறம். இவைகளினிடையே இங்கர்சால் அஞ்சாது, அடலேறு வென தமது கருத்துரைகளை அவ்வப்போது வெளியிட்டுவந்தார். நாளடைவில் அவர் ஏழைப் பங்காளரெனப் பெருவாரியானமக்களால் போற்றப்பட்டார்!

ராபர்ட் கிரீன் இங்கர் சால் 1833-ம், ஆண்டு,ஆகஸ்டுமாதம் 11-ம் தேதி, அமெரிக்காவிலுள்ள நியூயார்க் மாகாணத்திலுள்ள, டிரெட்ஸ்டன் என்னுமிடத்தில் பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் "ரெவரெண்ட் ஜான் இங்கர்சால்"—அன்னையார் பெயர் 'மேரி லிவிங்ஸ்டோன்' என்பதாகும். அம்மாது நற்குண நற்செய்கைகளனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற உத்தமி, ஏழை மக்களிடம் மட்டிலா அன்புடையவர். அவர்கள் நலனே தன் நலமெனக் கருதும் பெருந்தகையாளர். அவ்வித அருங்குணங்களமைந்த அன்னையின் ஆதரவில்—அரவணைப்பில் வளர முடியாது, இங்கர்சால் தமது இரண்டாவது வயதிலேயே தந்தையோடு தனியே விடப்பட்டார். இங்கர் சாலின் தகப்பனார் பாதிரியாக இருந்ததால், கிருஸ்தவ வேத புத்தகமாகிய பைபிளை அடிக்கடிப் படித்து, அதை மக்களுக்குப் போதித்துவந்தார். இதில் பல மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதை இங்கர்சால் உணர்ந்தார். அதை அவர் சமயம் நேரிடும்போது, வெளியிட எண்ணினார். எண்ணியவண்ணமே செய்தும் காட்டினார். இங்கர்சாலுக்கு,கல்லூரிப்படிப்பு மிகவும் சொற்பமானாலும், கல்வியை தம்மால் இயன்ற அளவுக்குப் பரப்பவேண்டுமென்ற பரந்த நோக்கம் இருந்தது. அதன்படியே அவர் தமது 20-ம் வயதிலேயே ஓர் பள்ளியை நிறுவி, அதற்குத் தானே ஆசிரியராக இருந்து, அனேக ஏழைப்பிள்ளைகளுக்குக் கல்வியறிவை ஊட்டினார். அப்போதும் அவர் மத சம்பந்தமான கருத்துக்களைவெளியிடாமலில்லை. மதக சழனியில் முளைத்த மூடக் கொள்கைகளை அவர் பல வேடிக்கைத் துணுக்குகளாக வெளியிட்டார். அவரது சொல்லோவியங்களை ரசிக்க, எப்போதும் அவரைச் சுற்றிலும் பலர் சூழ்ந்தே இருப்பர். தம வாழ்க்கைக்குரிய வசதியைத் தேடிக்கொள்ள 1854-ம் ஆண்டு ஓர் வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டார். அவர் எடுத்த எந்த வழக்கும் தோல்வியென்பதே இராமல், ஒவ்வொன்றிலும் வெற்றியே பெற்று வந்தார். அவரது அறிவின் ஆற்றலின் முன்பு, எந்த எதிர்ப்புச் சக்தியும் முன்நிற்க முடியாது ஓடி ஒளிந்தது!

1861-ம் ஆண்டில் நடந்த அமெரிக்க உள் நாட்டுச் சண்டையில் அவர் பெரும் பங்கு கொண்டார். 1862-ம் ஆண்டில் "பார்க்கர்" என்ற மங்கையைக் காதல் திருமணம் புரிந்து கொண்டார். இவரது அறிவின் ஆற்றலைக் கண்ட அரசாங்கத்தார் "இல்லீனியா" தேசத்திற்கு அவரை அட்டர்னி ஜனரலாக நியமித்தார்கள். அவர்தமதுசுயமரியாதைக்கு ஆதரவளிக்காது,அடிமைத்தனத்திற்கு சான்றாக இருந்திருப்பாரேயானால், அமரிக்கா தேசத்து தலைவர் பதவிகூடஅவரதுதாளடியில் (President) தஞ்ச மடைந்திருக்குமென்பது. பல அறிஞர்களின் கருத்தாகும்.

இங்கர்சால், சுதந்திரத்தைப் பற்றிப் பேசும்போது, சுதந்திரம் என்பது—பொருள், நிலம், ஆடை, ஆபரணங்கள் போன்ற எல்லாவற்றையும்விட மிக மிகச் சிறந்ததெனக்கூறுகின்றார். "மனிதன்—பெண்—குழந்தை -- அவர்தம் சுதந்திரம் என்று 1871-ம் ஆண்டு அவர் நிகழ்த்தின சொற்பொழிவு படிப்போர் மனதை இன்றும் அதன்பால் கவரச் செய்யும் சக்தியாயுள்ளது. மாதர் சுதந்திரத்தில்—மாதர் மறுமணத்தில்—மாதர் கல்வியில் — கைம்பெண்கள் கழகத்தில் இவருக்கு அதிக சிரத்தை உண்டு. 1884-1885-ம் ஆண்டுகளில், (பலப் பொதுத் தேர்தல் மேடைகளில்) அவர் நிகழ்த்தின சொற்பொழிவுகளில் மிகச்சிறந்தன, "வைதீகம் எவ்வழி?" "பொய்யும், அற்புதமும்" என்பவைகளாகும்,1897-ஆண்டு அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் 'நான் ஏன் நம்பிக்கையற்றவன்"—'மனிதரைச் சீர்திருத்தும் நோக்கம்" என்பவைகள் மிகச்சிறந்தனவாகும். மனிதப் பண்பு படைத்த எவரும் அவரது வாதத்தைக் கட்டாயம் ஒப்புக்கொண்டே தீருவர். அவரது சொற்பொழிவுகள்ஒவ்வொன்றும் இன்று அமெரிக்கர்களுக்கு பெரும் பொக்கிஷமாக அமைந்துள்ளது, அவர், நீக்ரோ மக்களைத் தம் சொந்த சகோதரசகோதரிகளைப்போன்று நடத்தினார். அவர் வெளியிட்ட உண்மைக் கடவுள்கள் (Their True gods) அவருக்கு அளவற்ற எதிரிகளைக் கிளப்பிவிட்டது. அவர்களின் எதிர்ப்புகள் அனைத்தும், இங்கர்சாலின் அறிவுரைகளால் சூரியனைக்கண்ட பனிபோல மறைந்தொழிந்தன! இங்கர்சால் யாவரிடமும் அன்புடன்ஒழுகிவந்தார். அவரது அருங்குணம் அவரது எதிரிகளைக்கூட வணங்கவைத்த தென்றால் மிகையாகாது, அவர் தம் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை—அதாவது வருடத்திற்கு 5000 பவுன்களை ஏழைமக்களுக்காகச் செலவிட்டு வந்தார் !.......

தன்னலம் கருதாதுழைத்த அக்காரிய வீரர் 21—7—1899ம் ஆண்டு இயற்கை எய்தினார் அவரது மரணச்சடங்குகள் கூட புரோகிதத்தன்மையில் நடக்கவே இல்லை ! அமெரிக்க மக்கள் அப்பெருந்தகையாளரின் நினைவாக, 1911ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அவரது உருவச்சிலை ஒன்றை "பிடாரியா" என்ற நகரில் நிறுவினர், இங்கர்சாலின் கட்டுரைகளும்— சொற்பொழிவு இயக்கியத்துக்கோர் அணிகலனாகும்அத்தகையப் புதையலை அளித்த அறிஞர் இங்கர்சாலின் புகழ் என்றும் மங்காது — மறையாது வாழ்க அவரது பெயர்—வளர்க அவரது கொள்கைகள்—ஒழிக மதமூட நம்பிக்கைகள் !

வாழ்த்துகிறோம்

வாழ்க்கைத் துணைவர்களாய் ஒப்பந்தம் செய்துகொண்ட தோழர் இரா. நெடுஞ்செழியன். எம். ஏ. அவர்கட்கும், தோழியர் ஆர். விசாலாட்சி, எம். பி பி எஸ், அவர்கட்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்து உரித்தாகுக.

இங்ஙனம்,

"மாலைமணி" அலுவலகத்தார்

தி. மு. கழகக் கட்டிட நிதி

கோவை மாவட்டத்தின் பங்கு

தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக கோவை மாவட்டம் சார்பில் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை தருவதென்றும், அத்தொகை வசூலுக்காக இரண்டு நாடகங்கள் நடத்தவதென்றும் முடிவு செய்துள்ளேன். நாடகங்களை நடத்தித்தர பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களும் இசைந்துள்ளார்கள் என்பதை, இதன்மூலம் அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்ஙனம்

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

27 - 3 - 50

கரூர் :— சி. பி. சிற்றரசு, எஸ். நெடுமாறன், அம்பில் தர்மலிங்கம்.

28 - 3 - 50

புகளூர்:— சி. பி. சிற்றரசு; அம்பில் தர்மலிங்கம்

29 - 3 - 50

பரமத்தி (கரூர்) :— சி. பி. சிற்றரசு, அம்பில் தர்மலிங்கம், என். ரத்தினம்.

30 - 3 - 50

ஆய்க்கொண்டான் பாளையம் :— டி. கே. சீனிவாசன், சி. பி. சிற்றரசு, அம்பில் தர்மலிங்கம்.

பேராவூரணி :— சி. என். அண்ணாத்துரை, என். வி. நடராசன்

பிர்க்கா அபிவிருத்தி...

—: 1-ம் பக்கத் தொடர்ச்சி :—

தும், இதனால் உயிர்ச் சேதம், பொருள் சேதம் முதலியன ஏற்படுவது இயல்பு அங்ஙனமேதான் இன்று மதுவிலக்கின் காரணமாக பொருளாதாரத் துறையில் பல முட்டுதலும், மோதுதலும் ஏற்படுகின்றன. அப்படியாயின் இத்தகைய நிலைமையைச் சமாளிப்பதுதான் எங்ஙனம் எனின், நிர்வாகத் திறமை வேண்டும். ஆட்சியாளருக்கு என்றுதான் பதில் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திறமைக்குறைவின் காரணமாகவேபலவீண்செலவுகள்ஏற்படுவது வழக்கம். அன்றியும் ஆட்சியாளர் பழமையைப் பற்றுக்கொள்ளும் காரணத்தாலும் பல வீண் செலவுகள் ஏற்படுவது உண்டு. அதற்கோர் உதாரணம் வேண்டுமெனின், பிர்கா அபிவிருத்தித் திட்டத்தைச் செல்லலாம். இதையும் தோழர் நடேசன் அழகுறச் சுட்டிக்காட்டுகிறார், "இது ஒரு மோசமான திட்டம்" என்று.

ஆம், மோசமான திட்டம் தான் பிர்கா அபிவிருத்தி என்ற பெயரில் ஆட்சியாளர் செய்திருக்கும் அபிவிருத்தி ஏதேனும் உண்டெனின், பிர்கா அபிவிருத்தி இலாகவில் பல காங்கிரஸ்காரர்களுக்கு உத்தியோகம் கிடைத்திருக்கலாம், அதிலும் குறிப்பாக அமைச்சர்கள், எம், எல் ஏக்களின்உற்றார்உறவினர்க்கு ஒருபடியான பலன் கிடைத்திருக்கக்கூடும்! அவ்வளவுதானேயன்றி "அபிவிருத்தி" என்ற பதத்துக்கு பயனுள்ள பொருள் வேறெதுவும் காண முடிவதில்லை. எனவேஇந்நிலை மாறித்திர வேண்டுவது அவசியம். ஆட்சியாளர் நாட்டின் வளத்தைப்பெருக்கி மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முடியாவிடினும்கிடைக்கின்ற வருவாயை பயனும்தக்க வழியில் செலவிடுவார்களாக. வீண் செலவு செய்வது ஆட்சியாளர்க்கு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அது மக்களுக்கு வேதனையை உண்டு பண்ணும் என்பதை அவர்கள் மறந்து விடலாகாது.

இனி நடப்பவை

தி.மா.தி.மு.க. சொற்பொழிவுகள்

28—3—50	புகளூர்
29—3—50	பரமத்தி
30—3—50	ஆய்கொண்டான் பாளையம்
31—3—50	குளித்தலை
1—4—50	பொன்மலை

* * *

ஆரணி:—27—3—50, ஞாயிற்றுக்கிழமை இரவு 8 30 மணிக்கு இவ்வூர் பகுத்தறிவு இலவசப் படிப்பக, கட்டிடத்தில், தோழர்இராதாகிருட்டினன் அவர்கள் தலைமையில் "அழகிரி நினைவு நாள்" கொண்டாட யோசிக்க வேண்டி கமிட்டிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் அனைவரும் இதையே, அழைப்பாகக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

* * *

பரமத்தி :—29—3—50 புதன்கிழமை மாலை 6 மணிக்கு இவ்வூர் சாத்தப்பாடி. பி. அங்கமுத்து அவர்கள் தலைமையின் கீழ் தி. கழகத் துவக்க விழா நடைபெறும். அதுபோது. தோழர்கள் சி.பி. சிற்றரசு, ஏ. பி. தர்மலிங்கம், என். ரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஈரோடு:—28—3—50 அன்று தளபதி "அழகிரி நினைவு நாள்" நகர தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெறும். அதுபோது தோழர்கள் கோவி ஜி. என். ராஜு, எஸ். அப்பாவு, என். சி. பாலகுரு, ஆர். பெருமாள், எல். ஆர். சந்தானம் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

சென்னை:—வள்ளுவர் இளைஞர் மன்றத்தின் சார்பாக வண்ணை தேனாம்பேட்டை நகராண்மைக் கழகப் பெண்பாடசாலையில். 26—3—50 ஞாயிறு காலை 9 மணிக்குத் திருக்குறள்வகுப்பு நடைபெறும்.

* * *

சென்னை:— முற்போக்கு எழுத்தாளர் மாநாடு 26—3—50 அன்று முழுவதும் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்

* * *

சென்னை:—நாடகக் கழகத்தின் நிதிக்காக, 26—3—50 அன்று, சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில், தோழர்கள் டி. கே. எஸ். சகோதரர்களின் "மனிதன்" என்னும் நாடகம் நடைபெறும்.

* * *

குளிசாலைப்பட்டி:- இவ்வூர் தி. மு. க. சார்பில், 28 3-50 செவ்வாய்க்கிழமை மாலை 7-30-மணிக்குத் தோழர் கே. ஏ. வெங்கடராமன் அவர்கள் தலைமையில், "அழகிரி நினைவு நாள்" கொண்டாடப்பெறும். அதுபோது தோழர்கள் எம். பாலன், இரா. செஞ்சோழன், ஆர். எஸ். மணி, ஏ.என். பாஸ்கரன், மணிமொழியார் ஆகியோர் பேசுவர்.